DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:99/2018 Deposition of Witness for : P.W.7**

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயசிங் | Caste | |
| Father's Name | : | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 27-10-2025

**சாட்சி காணொலி மூலம் ஆஜராகி அவரது பெயர் மற்றும் விவரங்கள் உறுதியசெய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யவிக்கப்பட்டு முதல் விசாரணை துவங்கப்பட்டது.**

நான் தற்போது விருதுநகர் அரசு மருத்துவக் கல்லூரியில் முதல்வராக பணியாற்றுகிறேன். 14.11.2013 அன்று காங்கேயம் காவல் ஆய்வாளர் வேண்டுகோள் படி நிலைய குற்ற எண் 717/2013 என்ற வழக்கில் சம்பந்தப்பட்ட போலி மதுபானத்தை ஆய்வு செய்த அறிக்கையின் படி திரு டி பாலமுருகன் என்ற காவலர் மூலம் நிபுணத்துவ கருத்துக்காக கோவை மருத்துவ கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் பேராசிரியராக பணியாற்றிய போது வேண்டுகோள் கடிதம் பெறப்பட்டதுமேற்படி கடிதத்தில் போலி மதுபானத்தை அட்ரோபின் கலந்து பயன்படுத்தி உட்கொண்டால் மனித உயிருக்கு தீங்கு ஏற்படுமா என கேள்வி எழுப்பப்பட்டிருந்தது. அதற்கு நான் பின்வறுமாறு பதில் அளித்துள்ளேன். பதில் அருந்துகின்ற நபரின் உடல் தன்மையைப் பொருத்த அவருடைய ரத்தத்தில் அட்ரோபின் அளவு30 மில்லி கிராம் முதல் 150 மில்லிகிராம் வரை உட்கொண்டால் மனித உயிருக்கு ஆபத்து

ஏற்படும் என குறிப்பிட்டு பதில் அளித்தேன்.

**<u>5 மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கில் சாராயம் அருந்திய நபர்கள் யாருக்கும் நான் சிகிச்சை அளிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் நான் பொதுவான கருத்துறை மட்டும் தான் வழங்கியுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

**<u>2, 6, 7 மற்றும் 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சாராயத்தை நேரடியாக ஆய்வு செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். ரசாயன பரிசோதனை அறிக்கையின் அடிப்படையில் நான் கருத்துரை வழங்கினேன். நான் சரிவர மேற்படி அறிக்கையை பரிசீலனை செய்து இறுதிக்கருத்துறை வழங்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை:- இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.29 19:00:23 +0530

3-ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No: 99/2018 Deposition of Witness for : P.W.8**

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வம் என்கிற செல்லபாண்டியன் | Caste | |
| Father's Name | : கருப்பையா | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 27-10-2025

**முதல் விசாரணை**

நான் தேனி மாவட்டம் பெரியகுளத்தில் குடியிருக்கிறேன். சம்பவத்தின்போது நான் வெள்ளகோவில் காளியப்பன் என்பவர் வீட்டில் குடியிருந்தேன். அப்போது மாவு கம்பெனியில் வேலை செய்து வந்தேன். அப்போது என்னுடைய நண்பர் ஒருவர் புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து வந்தார் அவரது பெயர் குமார். அவரும் நானும் மேற்படி வீட்டில் தங்கி இருந்தோம். 11.10 2013 தேதி அன்று மதியம் சுமார் 3.00 மணிக்கு போலீசார் மேற்படி வீ்டிற்கு வந்து கதவை தட்டினார்கள். காளியப்பனின் குடோனில் இருந்து மது தயாரிக்கும் மூலப் பொருட்களை கைப்பற்றினார்கள். என்னிடம் வாக்குமூலம் வாங்கி கையெழுத்து பெற்றார்கள். காளியப்பனை பார்ப்பதற்கு சுரேஷ் சரவணன், பூபதி, நாகராஜ், ராமச்சந்திரன், பொன்னுமணி என்கிற ஒரு அம்மாள் ஆகியோர் அவ்வப்போது வந்து போவார்கள். இது தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**5 மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவ சமயத்தில் நான் வெள்ளகோவிலில் குடியிருந்ததை காட்ட ஆவணமதியும் நான் போலீசாரிடம் ஒப்படைத்தேன் என்றால் இல்லை போலீசார்

கேட்டுக் கொண்டதற்கு நாங்கள் மேற்படி சமயத்தில் நான் காளியப்பன் வீட்டில் குடியிருந்ததாக பொய் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள நபர்களை போலீசாரிடம் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். வழக்கு தொடர்பாக எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் போலீசார் சொல்லிக் கொடுத்த அடிப்படையில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல.

**2, 6, 7 மற்றும் 9 எதிரிகள் தரப்பில்மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.29 19:00:28 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.